R 1064 (page 3)

# “எல்லாம் புதிதாயின”

## ALL THINGS NEW.

நூற்றாண்டுகளாக இந்த உலகம் பழமையாகத்தான் உள்ளதுவே,
ஆனால் இவைகளுக்கு அவள் தலை சாய்ப்பதில்லையே
அவள் தன் துன்பங்களை இருதயத்தில் தேக்கி வைத்துள்ளாள்,
அவள் தன்னகத்தே அநேகம் இறந்தவர்களை பிடித்து வைத்துள்ளாள்,
அவள் பாடும் கீதத்திலே சோகம் இழைந்தோடுகின்றதே,
கண்ணீர்த் துளிகள் அவள் மீது விழுகின்றதே,
சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவிக்கிறதே..
முன்பு இருந்தவை போன்று மீண்டும் எல்லாம் உருவாக்கப்பட எவ்வளவு காலம் ஆகும் ?

அவள் புன்னகை சூரியனைப் போன்றே மேலும் பிரகாசமாய் கூடிக் கொண்டே
போகின்றதே,
வானங்கள் அவளை அபரிமிதமாகவே ஆசீர்வதிக்கப் பிரியப்படுகின்றதே,
நீதியில் வாசம் பண்ணும் அழகான ஒன்று என்னவாக இருக்கும் ?
ஓ, மகிழ்ச்சியான உலகமே ! பரிசுத்த காலமே !
தவறானது இறந்து விடும் போது சண்டைகள் ஓய்ந்து விடும் போது,
பரலோகத்தின் மணிகள் யாவும் சமாதான
இன்னிசையாகவே ஒலிக்கப் பெறுமே,

இந்த பிரபஞ்சத்தை அழிக்கும் அனைத்திற்கும் புதிய பூமியில் இடம் இருக்காதே,
சாபங்கள் இனி இருப்பதில்லை,
உடைந்த உள்ளங்களே, உங்கள் கதறல்களை நிறுத்திக் கொள்ளுங்கள்,
வாக்களிக்கப்பட்ட காலை - பகல்பொழுது
உங்களுக்காகவே விடிந்து கொண்டிருக்கிறது,
அரியணையில் வீற்றிருப்பவர் கூறுகிறார்; நான்
எல்லாவற்றையும் புதிதாக்குகிறேன் என்றே,

இறந்தவர்க்காக நாம் துக்கம் கொண்டாடினாலும், அவர்கள் விரைவில் எழுந்திருப்பாரே,
தொலைந்து போனவர்கள் மீண்டும் தங்கள் பழைய நிலைக்கு வந்திடுவாரே,
ஓ ! நம் மனித இருதயங்கள், அந்த பரிசுத்த வார்த்தையின்றி முறிவுபடுமே
மங்கின கண்களோ மேல் நோக்கிப் பார்த்திடுமே,
கவலை கொண்ட இருதயங்கள் அகமகிழுமே - சர்வ வல்ல
தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கண்டே,
அந்த தீர்க்கதரிசனக் குரலின் சத்தத்தில்
"நான் சகலத்தையும் புதிதாக்குவேன்”

-------------------